SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

EDB SRI LANKA

## MINISTRY OF INDUSTRY AND ENTREPRENEURSHIP DEVELOPMENT

# IPM ESSEN 2027 இலங்கை காட்சி கூடம்

### 2027 ஜனவரி 26 – 29 எஸ்சன், ஜெர்மனி

ஜெர்மனியில் எஸ்சன், மெசப்பிளட்ஸ், மெச்சே எஸ்சனில் 2026 ஜனவரி 26 தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் IPM ESSEN 2027 சர்வதேச தோட்டக்கலை வர்த்தகக் கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பை EDB ஏற்பாடு செய்துள்ளது.

IPM ESSEN 2027 சர்வதேச தோட்டக்கலை வர்த்தகக் கண்காட்சி, ஐரோப்பிய பிராந்தியத்தில் நடைபெறும் மிகப்பெரிய தோட்டக்கலை வர்த்தகக் கண்காட்சிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது மலர்ச்செய்கை மற்றும் தென்னை நார் மற்றும் தென்னை நார் அடிப்படையிலான தயாரிப்புகளின் உற்பத்தியாளர்கள், பதப்படுத்துநர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஒரே இடத்தில் சந்தித்து வணிகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும், அறிவு மற்றும் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக்கொள்ளவும் ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. இலங்கை காட்சி கூடம் ஒன்றை ஏற்பாடு செய்வதன் நோக்கம், இலங்கை நிறுவனங்களுக்கு தங்களது மலர்ச்செய்கை மற்றும் தென்னை நார் மற்றும் தென்னை நார் அடிப்படையிலான தயாரிப்புகளை காட்சிப்படுத்தி, அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதும், ஐரோப்பிய பிராந்தியத்தின் சந்தைப் போக்குகளை புரிந்துகொள்வதற்கும் உதவுவதுமாகும்.

**யாருக்காக**

சர்வதேச தரநிலைகளைப் பின்பற்றி, சர்வதேச சந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்ட பின்வரும் தயாரிப்பு வகைகளைச் சேர்ந்த இலங்கையின் மலர்ச்செய்கை மற்றும் தென்னை நார் மற்றும் தென்னை நார் அடிப்படையிலான தயாரிப்புகளின் உற்பத்தியாளர்கள், பதப்படுத்துநர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வெட்டு அலங்கார இலைகள்
- வேரூன்றிய தாவரங்கள்
- திசு வளர்ப்பு தயாரிப்புகள்
- மலர்ச்செய்கை விதைகள்
- நீர்வாழ் தாவரங்கள்
- தென்னை நார் மற்றும் தென்னை நார் அடிப்படையிலான தயாரிப்புகள்
- தோட்டக்கலை சேவைகள் மற்றும் வெளிப்புற அலங்காரங்கள்

**பங்கேற்புச் செலவு**

கண்காட்சி இடம் மற்றும் நிர்மாணத்திற்கான செலவுகள், அத்துடன் அதனுடன் தொடர்புடைய அனைத்து செலவுகளும் பங்கேற்கும் நிறுவனங்களால் ஏற்றல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் SME நிறுவனங்களுக்கு, நிதி ஒதுக்கீடுகள் கிடைப்பதைப் பொறுத்து, கண்காட்சி இடம் / நிர்மாணத்திற்கான செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கான நிதி உதவியை வழங்குவதை EDB பரிசீலிக்கலாம்.

**விண்ணப்பம் மற்றும் தேர்வு**

www.srilankabusiness.com எனும் EDB இணையதளத்தில் ("Announcements" பிரிவின் கீழ்) கிடைக்கப்பெறும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “IPM ESSEN 2027” என்று குறிப்பிட்டு 2026 ஓகஸ்ட் 21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் EDB, விவசாய பணிப்பாளருக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இந்த நிகழ்ச்சிக்கு பங்கேற்க பொருத்தமானவர்களை தேர்வு செய்வதற்கு குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் EDB மூலம் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு, 011-2300732,071-6569182. மின்னஞ்சல்: gayanw@edb.gov.lk இல் உதவிப் பணிப்பாளர்/ திரு கயான் வீரசிங்கவை தொடர்புகொள்ளவும்.

---

**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**NDB-EDB கோபுரம், 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.**
**இணையதளம்: www.srilankabusiness.com**